ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# மொழிபெயர்ப்பாளர் பதவி (ஆங்கிலம்-சிங்களம்)/(ஆங்கிலம்-தமிழ்) (ஒப்பந்த அடிப்படை)

## 1.0 பணி/பொறுப்புக்கள்:

புதுமையான மொழிபெயர்ப்புக் கருவிகளையும் நடைமுறைகளையும் பயன்படுத்தி மத்திய வங்கியின் தொழில்நுட்பப் பதவியினர் மற்றும் துறைசார் நிபுணர்களுடன் நெருங்கிப் பணியாற்றுதல். மொழிபெயர்ப்பாளர்கள் அனைத்து ஒதுக்கப்பட்ட மொழிபெயர்ப்புப் பணிகளையும் (ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு அல்லது ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு மற்றும் மறுதலையாகவும்) மொழிபெயர்ப்பதற்கும், பொருத்தமான தொழில்நுட்ப கலைச்சொற்களைப் பயன்படுத்தி வெளியிடத்தக்கவாறான அளவிற்கு ஒப்புநோக்கி மொழிபெயர்ப்புப் பணியினை நிறைவுசெய்வதற்கும் எதிர்பார்க்கப்படுவர்.

## 2.0 வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வித் தகைமைகளும் அனுபவமும்:

### 2.1 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மொழிபெயர்ப்பில் (ஆங்கிலம்-சிங்களம்-ஆங்கிலம் அல்லது ஆங்கிலம்-தமிழ்-ஆங்கிலம்) (விசேட) பட்டம்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பட்டத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மொழிபெயர்ப்பாளராக இரண்டு (02) வருட அனுபவம்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வேறு நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மொழிபெயர்ப்பில் டிப்ளோமா உடன் இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மொழிபெயர்ப்பாளராக நான்கு (04) வருட அனுபவம்

## 3.0 வயது:

2024.10.16 அன்று 55 வருடங்களாக அல்லது குறைவாகவிருத்தல்

**கல்வி தகைமைகள் அத்துடன் பணி அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பதாரிகள் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர். மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் ஏதேனும் கட்டத்தில் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

## 4.0 தொழில்:

மூன்று (03) வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையிலானது. ஒப்பந்தம், தொடக்கத்தில் ஒரு ஆண்டுக்கு கைச்சாத்திடப்படுவதுடன் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செயலாற்றத்தின் அடிப்படையில் மீளப்புதுப்பிக்கப்படும்.

## 5.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புகளுடன் ரூ.125,000 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரிவிதிக்கத்தக்க மாதாந்த ஊதியத்துடன் அலுவலக நேரங்களுக்கு மேலதிகமாகப் பணியாற்றும் மணித்தியாலங்களுக்கு ஊக்கக்கொடுப்பனவு வழங்கப்படும்.

## தெரிவுசெய்யப்படும் முறை

பொருத்தமான அபேட்சகர்கள் தேர்ச்சிப் பரீட்சையில் (மொழிபெயர்ப்பு மற்றும் கணனித் தேர்ச்சிகள் என்பவற்றைக் கணிப்பிடுவதற்கு) செயலாற்றுகையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர் அத்துடன் இதற்காக நேர்முகப் பரீட்சையொன்றும் நடாத்தப்படும்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களை இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் **2024.10.16 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால்** மூலம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மொழிபெயர்ப்பாளர் பதவி (ஆங்கிலம்-சிங்களம்) (ஒப்பந்த அடிப்படை)"** அல்லது **"மொழிபெயர்ப்பாளர் பதவி (ஆங்கிலம்-தமிழ்) (ஒப்பந்த அடிப்படை)"** பதவிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டார். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் நடத்தப்படும் சான்றிதழ் சரிபார்ப்பின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகள் எக்காரணத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்

ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

**பணிப்பாளர் - மனிதவளங்கள் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**
**தொலைபேசி: 011-2477330 தொலைநகல் : 011-2477715**